(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

மாணவ-மாணவியருக்கு மட்டும்) **SUBJECT CODE 21UTM4A5**

**என்.ஜி.எம்.கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**பி.ஏ. – தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**நான்காவது பருவம்** **காலம் : 3 மணி நேரம்**

**பகுதி – 3**

**கோயிற்கலைகள்**

**பகுதி – அ** **(10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)**

1. எந்த நூலை அறிந்தோர் நூலறி புலவர் என்று அழைக்கப்பட்டனர்?

   அ) ஓவியக்கலை ஆ) கட்டடக்கலை இ) நாடகக்கலை ஈ) சிற்பக்கலை

2. வண்ணம் கலவாமல் வடிவம் மட்டும் உள்ள ஓவியத்தின் பெயர் என்ன?

   அ) புனையா ஓவியம் ஆ) விதான ஓவியம் இ) சுவர் ஓவியம் ஈ) திரைச்சீலை ஓவியம்

3. சுத்த நிருத்தம் என்று அழைக்கப்படுவது எது?

   அ) அவியம் ஆ) சொக்கம் இ) மெய்க்கூத்து ஈ) நாடகம்

4. பசுபதீஸ்வரர் ஆலயம் எங்கு உள்ளது?

   அ) மதுரை ஆ) திருச்சி இ) திருநெல்வேலி ஈ) கரூர்

5. சைவ ஆகமங்கள் எத்தனை?

   அ) 28 ஆ) 25 இ) 24 ஈ) 30

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை தருக (K2)**

6. பள்ளிப்படை என்றால் என்ன?
7. மண்ணீட்டாளர் - குறிப்பு தருக.
8. குன்றக்குரவை -விளக்கம் தருக.
9 பேரூர் பட்டீஸ்வரர் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் சிறப்பு யாது?
10. கௌமார சமயம் பற்றி எழுதுக.

(த.பி.பா.)

**பிரிவு – ஆ** **(5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) வேந்தர்கள் அடைந்த வெற்றியின் பொருட்டு எடுக்கப்பட்டக் கோயில்கள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

ஆ) செப்புத் திருமேனிகளின் சிறப்புகளைப் பட்டியலிடுக.

12. அ) ஓவியக்கலையின் தொன்மை குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வார்ப்புக்கலை பற்றி இயம்புக.

13. அ) தெய்வ வழிபாட்டில் இசையின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்க.

**(அல்லது)**

ஆ) இறைஞானத்தை நோக்கிய தத்துவங்களைக் கூறுக.

14. அ) கொங்கு மக்கள் பெருமாளைப் போற்றிய திறத்தை இயம்புக.

**(அல்லது)**

ஆ) பெண் தெய்வ வழிபாட்டில் கொங்கு மக்களின் பங்களிப்பினைப் புலப்படுத்துக.

15. அ) ரிக் வேதத்தின் சிறப்புகள் யாவை?

**(அல்லது)**

ஆ) அறுவகைச் சமயங்களை விளக்குக.

**பிரிவு -இ** **(4x10=40)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக. (பதினாறாவது கேள்விக்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) (K4 /K5)**

16. சங்ககால கட்டட அமைப்பின் பிரிவுகளை விளக்குக.
17. கோயில்களுக்கான இலக்கணங்களை விரித்துரைக்க..
18. தமிழர் வளர்த்த சிற்பக்கலை பற்றிக் கட்டுரைக்க.
19. நாடகக்கலை வழி அறியலாகும் பண்பாட்டு மதிப்புகளை ஆராய்க.
20. கொங்குநாட்டில் உள்ள ஏழு சிவ தலங்களைப் பற்றி விரித்தெழுதுக.
21. நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் நிகழ்த்தப்படும் சூழலை விவரி.

**Ethical Paper**

*****